# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure.)

IN THE COURT OF III ADDITIONAL CITY CIVIL COURT, CHENNAI-600 104

SC. No. 8/2019

Deposition of witness for Prosecution / Defence / Court

PW -2

Name : தாமரை செல்வி

Address :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 10th day of March, 2020 .

## Dated: 10.03.2020

### முதல் விசாரணை

நான் தற்போது அத்திப்பட்டு, அம்பத்தூர் 21வது பிளாட்டில் வசித்து வருகிறேன். சம்பவ சமயத்தில் கக்கான்ஜி நகர், ICF காலணி, சென்னை -38ல் வசித்து வந்தேன். வழக்கு சம்பவத்தில் இறந்து போனவர் என்னுடைய மகன் பிரகாஷ்ராஜ் ஆவார். 01.01.2018 அன்று காலை சுமார் 7 மணியளவில் விமலநாதன் மகன் சூர்யா என்பவர் என் மகனின் நண்பர். சூர்யா என் மகனை வந்து கூப்பிட்டார் அதற்கு என் கணவர் அவனை ஏன் கூப்பிடுகிறாய் என்று கேட்டார். நியூ ஆவடி ரோடு அருகே உள்ள பொது கழிப்பிடத்திற்கு டாய்லெட்டிற்கு செல்லலாம் என்று என் மகன் சூர்யாவை அழைத்தார். அப்போது சூர்யா கருப்பு கவர் ஒன்று வைத்திருந்தார். அது என்னவென்று என் கணவர் கேட்டார். அதற்கு சூர்யா New Year பார்ட்டிக்காக சராயம் வைத்திருப்பதாக கூறினார். என் கணவர் என் மகனிடம் சராயம் எல்லாம் குடிக்ககூடாது என்றும், டாய்லெட் போய்விட்டு வந்துவிட வேண்டும் என்று கூறினார். அதன்பிறகு நாங்கள் வேலைக்கு சென்றுவிட்டோம். நான் வீட்டு வேலை செய்கிறேன். சுமார் காலை 8.45, 9.00மணிக்கு என் மகள் அலைபேசி மூலம் என்னை அழைத்து குணா, லோகேஷ் என்பவர்கள் சூர்யா என்

மகன் பிரகாஷ் ராஜ்யை முட்புதரில் கொலைசெய்து போட்டுவிட்டதாக தகவல் கூறினார். நான் ஆட்டோ பிடித்து வந்துக்கொண்டு என் கணவருக்கும் தொலைபேசி மூலம் தகவல் தெரிவித்தேன். நான் நீயூ ஆவடி சாலையில் பொது கழிப்பிடத்திற்கு பின்னாலுள்ள முட்புதரில் என் மகன் கிடந்தார். என் மகனுக்கு கழுத்திலும் முதுகிலும், நெஞ்சிலும் பல இடத்தில் கத்தியால் குத்தப்பட்டு சேற்றில் கிடந்தார். என் கணவர் வந்தபிறகு ICF காவல்நிலையத்தில் அவர் புகார் கொடுத்தார். அதன்பிறகு ICF காவல்நிலையத்திலிருந்து மாலை 7 மணிக்கு தகவல் கிடைத்தவுடன் என் கணவர் காவல் நிலையம் சென்று எதிரியை அடையாளம் காட்டினார். எதிரியை எனக்கு அடையாளம் தெரியும். போலீசார் என்னை விசாரணை செய்தனர்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

என்னுடைய வீட்டிற்கும் MTH பெட்ரோல் பங்கிற்கும் இடையே நடந்து சென்றால் ஒரு 7 நிமிட தூரம் இருக்கும். 2 வீட்டில் நான் வீட்டு வேலை செய்கிறேன். ஒரு மருத்துவர் வீட்டிலும் மோகனா ஆர்த்தோ என்பவர் வீட்டிலும் வீட்டு வேலை செய்கிறேன். மேற்படி 2 வீடுகளும் அருகருகே உள்ளது. காலை 7.30 மணிக்கு வீட்டு வேலைக்கு சென்று மாலை 7 மணிக்கு வீடு திரும்புவேன். நான் வீட்டு வேலைகள் அனைத்தும் செய்கிறேன். நான் முதலில் மருத்துவர் வீட்டிற்கு வேலைக்கு செல்வேன். நான் வீட்டு வேலைக்கு செல்லும் இடத்தில் கொடுப்பதை சாப்பிட்டுவிட்டு வேலை செய்வேன். புது வருட பிறப்பை எப்போது கொண்டாடுவார்கள் என்று எனக்கு தெரியும். இரவு 12 மணிக்குதான் புது வருட கொண்டாட்டம் இருக்கும் என்றால் சரிதான். சம்பவ சமயத்தில் எங்களுடைய வீட்டில் டாய்லெட் இல்லை பொதுகழிப்பிடத்திற்குதான் செல்வோம். சூர்யா வரும்போது நான் பாத்ரூம்மில் இருந்தேன். அப்போது என் கணவர் சூர்யாவுடன் பேசிக்கொண்டிருந்தார். பிறகு நான் வந்துவிட்டேன். சூர்யா சராய பாட்டில்

வைத்திருப்பதாக என்னிடம் கூறினார். அவர் சாராய பாட்டில் வைத்திருப்பதால் அடித்து விரட்டுமாறு என் கணவரிடம் நான் சொல்லியதாக நினைவில்லை. புது வருடம் என்றாலும் நானும் என் கணவரும் வேலைக்கு சென்றோம். முதலில் யார் வேலைக்கு கிளம்பினோம் என்று தற்போது எனக்கு நினைவில்லை. என் கணவருக்கு எங்கள் பகுதியில் நிறைய நண்பர்கள் என்றால் எங்கள் வீட்டிற்கு அருகில் இருப்பவர்களிடம் அவர் பேசுவார். என் கணவரின் நண்பர்கள் பெயர் எனக்கு தெரியவில்லை. என் மாமியார் திடக்காத்திரமாக உயிருடன் இருக்கிறார். என் கணவர் தினமும் குடித்துவிட்டு அந்த பகுதியில் உள்ள முரளி, சுகுமார், சந்தோஷ்குமார் ஆகியோர்களுடன் சேர்ந்து கொண்டு தெலுங்கு பெண்களை கலாட்ட செய்வார் என்றால் சரியல்ல. என் மகள் எனக்கு சம்பவம் குறித்து தொலைபேசியில் சொன்னபோது டாக்டர் வீட்டில் நான் வேலை செய்துக்கொண்டிருந்தேன். என் கணவர் வேலை இல்லாமல் திரிந்து கொண்டிருக்கிறார் என்றாலும் என் மாமியார்தான் உழைத்து எங்கள் குடும்பத்தை பராமரித்து வருகிறார் என்றாலும் சரியல்ல. நான் போலீஸ் விசாரணையில் குணா, சுரேஷ் ஆகியோர் என் மகளுக்கு சம்பவம் குறித்து சொன்னதாக கூறவில்லை என்றால் சரியல்ல. எனக்கு சம்பவம் குறித்து நேரடியாக தெரியாது என்றால் சரிதான். என் மகன் புது வருட கொண்டாட்டத்திற்காக இரவு 9 மணிக்கு வெளியில் சென்று அவரை யாரோ குத்தி கொன்றுவிட்டார்கள் என்றால் சரியல்ல. நீயூ ஆவடி ரோடில் பொதுமக்கள் நடமாட்டமும் வாகன போக்குவரத்தும் அதிகமாக இருக்கும் என்றால் சரிதான். பொது கழிப்பிடத்திற்கு பின்புறம் புதராக இருக்கும். ICF சாலையிலிருந்து இறங்கி செல்கிற வழியில் பொதுகழிப்பிடம் உள்ளது. ரயில்வே காலணியில் எந்த வீட்டிலும் கழிப்பிட வசதி இல்லை. 1472 காலணி வீட்டிலும் கழிப்பிட வசதி இல்லை. எனவே, ஆண்கள் பெண்கள் அனைவரும் மேற்படி பொது

கழிப்பிடத்திற்குதான் செல்வார்கள். நானும் என் கணவரும் சம்பத்தன்று வீட்டில்தான் இருந்தோம் என்றாலும் யாரோ பொதுமக்கள்தான் என் மகன் இறந்துபோனது பற்றி கூறினார் என்றால் சரியல்ல. என் மகள் சொல்லிதான் சம்பவம் குறித்து தெரியவந்து என்று நான் பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. காலை 7 மணிக்கு சூர்யா வந்து கழிப்பிடத்திற்கு செல்ல என் மகனை அழைத்ததாக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. சூர்யா புதுவருடத்திற்காக அதிகாலையில் சர்ச்சிற்கு சென்றுவிட்டு காலை 9 மணிக்குதான் வீடு திரும்பினார் என்றால் சரியல்ல. என் மகனுக்கு எங்களுடைய பகுதியில் நிறைய எதிரிகள் இருக்கின்றார்கள் என்றாலும் அவர்களில் ஒருவர்தான் இரவே என் மகனை கொன்றுவிட்டார்கள் என்றாலும் சம்பவத்திற்கும் சூர்யாவிற்கும் சமபந்தமில்லை என்றால் சரியல்ல.

Typed to my dictation in my presence and hearing and under my personal dictation and superintendence and interpreted to the Witness and admitted and signed by the witness to be correct.

**Dt.10.03.2020** **III Addl. District Judge.**